# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 APRIL

மலர்: 7 இதழ்: 7 ஏப்ரல் 2014 விலை: ரூ. 5

**நான் ஹிஜாபுக்குள் நுழைந்த கதை**






**பாங்கோசையும் நாய்கள் ஊளையிடுதலும்**





**விண்வெளியில் ஒரு பரீட்சைக்கூடம்!**

# நல்வாழ்வு வாழ வழிகாட்டுதல்கள்

## ● பாவம் எனும் வேலியைச் சுற்றி மேயாதீர்கள்!

“ஹலால் எனும் அனுமதிக்கப்பட்டது தெளிவானது ஹராம் எனும் விலக்கப்பட்டதும் தெளிவானது. அவ்விரண்டிற்குமிடையே சந்தேகத்திற்கிடமான காரியங்கள் உள்ளன. பாவம் எனச் சந்தேகப்படுபவற்றைவிட்டு விடுகிறவர் பாவம் என்று தெளிவாகத் தெரிவதை நிச்சயம் விட்டு விடுவார். பாவம் எனச் சந்தேகப்படுபவற்றைச் செய்யத் துணிகிறவர் தெளிவான பாவங்களிலும் வீழ்ந்து விடக் கூடும். பாவங்கள் இறைவன் போட்ட வேலிகளாகும். வேலியைச் சுற்றி மேய்கிறவர் அதற்குள்ளும் சென்று விடக்கூடும்” என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் :நுஃமான் இப்னு பஷீர்(ரலி), ஆதாரம் : புகாரி.

## ● தும்மினால் கூறவேண்டியவைகள்!

“நீங்கள் தும்மினால், ‘அல்ஹம்துலில்லாஹ்’ (எல்லாப் புகழும் இறைவனுக்கே) என்று சொல்லுங்கள். (இதைக் கேட்கும்) ‘உங்கள் சகோதரர்’ அல்லது ‘நண்பர்’ யர்ஹமுக்கல்லாஹ் (இறைவன் உங்களுக்குக் கருணை புரியட்டும்) என்று சொல்லட்டும். அவர் உங்களுக்காக ‘யர்ஹமுக்கல்லாஹ்’ என்ற சொன்னால், நீங்கள் (அவருக்காக) ‘யஹ்தீக்குமுல்லாஹ் வ யுஸ்லிஹ் பாலக்கும்’ (இறைவன் உங்களுக்கு நல்வழி காட்டட்டும்! உங்கள் நிலையைச் சீராக்கட்டும்) என்று சொல்லுங்கள்” என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி), ஆதாரம் : புகாரி.

## ● அண்டை வீட்டாருக்கு தொல்லை தராதே!

“இறைவனையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தர வேண்டாம். இறைவனையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும். இறைவனையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப் பேசட்டும். அல்லது வாய்மூடி இருக்கட்டும்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 APRIL

மலர்: 7 இதழ்: 7 ஏப்ரல் 2014 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

இறைவனின் எச்சரிக்கைகள் பூச்சாண்டிகள் அல்ல. 2

நான் ஹிஜாபுக்குள் நுழைந்த கதை 5

பாங்கோசையும் நாய்கள் ஊளையிடுதலும் 8

நாத்திகர்களுக்கு நறுக்கென்ற கேள்விகள் 10

அழுதபடியே தொழுத அண்ணல் 11

எண்ணித் துணிவது எவ்வாறு? - இஸ்திகாரா 12

விண்வெளியில் ஒரு பரீட்சைக் கூடம்! 14

பூமி என்ற வாழ்விடம் 17

மருத்துவரின் மனம் கவர்ந்த இஸ்லாம் 19

ஹலால் என்றால் என்ன? 21

நாவின் மூலம் ஈடேற்றம் 24

published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# இறைவனின் எச்சரிக்கைகள் வெறும் பூச்சாண்டிகளல்ல!

இன்று கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள், மதம், நிறம், மொழி, இனம், நாடு போன்ற பல காரணிகள் நம்மைப் பிரித்தாலும் மனிதர்கள் நாம் யாவரும் ஒருவகையில் இணைந்து இரண்டறக் கலந்துதான் வாழ்கிறோம். இந்நிலை இவ்வாறே தொடருமா அல்லது முடியக் கூடியதா?

இதற்கோர் முடிவுண்டு என்கிறான் நம்மைப் படைத்தவன். ஆம், இவ்வுலகு ஒருநாள் அழியும். அதைத் தொடர்ந்து மீண்டும் நாம் அனைவரும் விசாரணைக்காக மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவோம் என்கிறான் அவன். இதோ தனது இறுதி வேதமாம் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

**30:14. மேலும் (இறுதித் தீர்ப்புக்குரிய) நாள் நிலைபெறும்போது – அந்நாளில், அவர்கள் (நல்லோர், தீயோர் எனப்) பிரிந்து விடுவார்கள்.**

**30:15. ஆகவே, எவர்கள் விசுவாசம் கொண்டு நற்காரியங்களைச் செய்தார்களோ அவர்கள், (சுவனப்) பூங்காவில் மகிழ்விக்கப்படுவார்கள்.**

**30:16. இன்னும், எவர்கள் சத்தியத்தை மறுத்து (அதாவது கா:ஃபிராகி) நம்முடைய வசனங்களையும் , மறுமையின் சந்திப்பையும் பொய்ப்பித்தார்களோ அ(த்தகைய)வர்கள் வேதனைக்காகக் கொண்டு வரப்படுவார்கள்.**

இன்று நாம் இரண்டறக் கலந்து வாழ்ந்தாலும், நமது இறைநம்பிக்கையின் அடிப்படையிலும் நமது வினைகளின் அடிப்படையிலும் நாம் பிரிக்கப்படுவோம். அந்த நாள் யாராலும் தவிர்க்கமுடியாத நாள்! அது நிகழ்வதை தடுத்துவிடவோ அல்லது அந்நிகழ்வில் இருந்து யாரும் தப்பி ஓடவோ இயலாத நாள்! காலாகாலமாக இறைத்தூதர்களாலும் இறைவேதங்களாலும் எச்சரிக்கை செய்யப்பட்ட நாள்தான் அது! யார் இறைவனுக்காக தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தார்களோ அவர்கள் தங்கள் உழைப்பின் பலனை அனுபவிக்கத் துடங்கும் நாள் அதுவே! யார் இறைகட்டளைகளை புறக்கணித்தும் அலட்சியப்படுத்தியும் ஏளனம் செய்தும் வாழ்ந்தார்களோ அவர்கள் அதற்கான தண்டனையை அனுபவிக்கத் துடங்கும் நாளும் அதுவே!

ஆக, அந்நாளில் மனிதனுக்கு அவனது குலப்பெருமையோ, செல்வமோ, ஆதிக்க பலமோ எதுவுமே துணை வராது. எவர் துணையும் இன்றி வெட்டவெளியில் விடப்படுவது போன்ற ஓர் நிலை அது! ஒவ்வொருவரும் அவரவர் வாழ்நாளில் சம்பாதித்த வினைகளின் பட்டியலை மட்டுமே சுமந்தவர்களாக நிற்கும் நாள் அது! அந்நாளின்

கொடுமைகளில் இருந்து காப்பாற்றிக்கொள்ள விரும்புவோருக்கு இதோ இறைவன் தொடர்ந்து கூறுகிறான்:

*30:17.* ஆகவே, (இறைவிசுவாசிகளே!) நீங்கள் மாலைப் பொழுதை அடையும்போதும் நீங்கள் காலைப் பொழுதை அடையும்போதும் இறைவனை துதித்துக் கொண்டிருங்கள்.

*30:18.* இன்னும் வானங்களிலும், பூமியிலும் அவனுக்கே புகழனைத்தும் இன்னும், இரவிலும் நீங்கள் நண்பகலின் போதும் (இறைவனைத் துதியுங்கள்).

ஆம், இவ்வுலகம் என்ற பரீட்சைக்களத்தில் நம் வாழ்வின் உண்மை நோக்கத்தை நாம் மறந்து விடாமல் இருக்கவும் நேர்மையாக வாழவும் ஷைத்தான் நம்மை தீய சஞ்சலங்களுக்கு உட்படுத்தி வழிகெடுக்காமல் இருக்கவும் இறைநினைவு அடிக்கடி புதுப்பிக்கப் பட வேண்டும். அதற்காக ஏவப்படுவதே இறைவனை துதித்தல் என்ற கடமை. அந்த துதித்தலுக்கு தகுதியானவனும் படைத்தவன் ஒருவன் மட்டுமே. அவனது ஆற்றல்களை பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து அறியத் தூண்டுகிறான். அதற்காக பூமியெங்கும் பரவி நிற்கின்றன அவனது அத்தாட்சிகள்! இவற்றை பகுத்தறிவு கொண்டு ஆராயும்போது இறைவனின் எச்சரிக்கைகள் அனைத்தும் மறுக்கமுடியாத உண்மைகள் என்பதும் அவை வெற்றுப் பூச்சாண்டிகள் அல்ல என்பதும் புலனாகும்.

*30:19.* அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள்.

*30:20.* மேலும், அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும், பின்பு நீங்கள் மனிதர்களாக (பூமியின் பல பாகங்களில்) பரவியதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.

இல்லாமையில் இருந்து நாம் படைக்கப்பட்டு இன்று நடமாடிக்கொண்டு இருப்பதும் நாம் அன்றாடம் அனுபவித்துக் கொண்டு இருப்பவையும் என அனைத்தும் அந்த இறைவனின் ஏற்பாடுகளே! இதில் எங்குமே மனித கரங்களுக்கோ அறிவுக்கோ எவ்விதப் பங்கும் இல்லை அதிகாரமும் இல்லை என்பது தெளிவு!

*30:21.* இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும் சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.

*30:22.* மேலும் வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும் உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும், அவனுடைய

அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் கற்றறிந்தோருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.

*30:23.* இன்னும், இரவிலும் பகலிலும், உங்களுடைய (ஓய்வும்) உறக்கமும் அவன் அருளிலிருந்து நீங்கள் தேடுவதும் அவனுடைய அத்தாட்சிகளினின்றும் உள்ளன – செவியுறும் சமூகத்திற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.

*30:24.* அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை – அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன் நிச்சயமாக அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சகள் இருக்கின்றன.

*30:25.* வானமும், பூமியும் அவனுடைய கட்டளையினால் நிலைபெற்று நிற்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளதாகும். பின்னர் ஓர் அழைப்பைக் கொண்டு உங்களை அழைத்த உடன் நீங்கள், பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவீர்கள்.

ஆம், மேற்கூறப்பட்ட அற்புதங்களில் உங்களுக்கு எவ்வாறு எந்த பங்கும் ஆற்றலும் இல்லையோ அதேபோல அதைத் தொடரும் நிகழ்விலும் உங்களுக்குப் பங்கு கிடையாது. அவன் மீண்டும் அழைக்கும் போது பூமியில் இருந்து வெளிப்பட்டு வருவதைத் தவிர வேறு வழியுண்டா சொல்லுங்கள்!

*30:26.* வானங்களிலும் பூமியிலும் இருப்பவை எல்லாம் அவனுக்கே உரியவை – எல்லாம் அவனுக்கே கீழ்படிந்து நடக்கின்றன.

*30:27.* அவனே படைப்பைத் துவங்குகின்றான் பின்னர் அவனே அதை மீட்டுகிறான் மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும். வானங்களிலும் பூமியிலும் மிக்க உயர்ந்த பண்புகள் அவனுக்குரியதே் மேலும் அவன் மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.

எனவே அந்த எல்லாம்வல்ல இறைவனுக்குக் கீழ்படிந்து நடப்பதுவே அறிவுடைமை. அந்த கீழ்படிதலுக்கே அரபு மொழியில் இஸ்லாம் என்று கூறப்படுகிறது.

## முக்கிய அறிவிப்பு

இதழின் உள் அட்டையில் குறிப்பிட்டவாறு முஸ்லிம் அன்பர்கள் தங்கள் விலாசத்தை எஸ்எம்எஸ் செய்தால் அவர்களுக்கு நான்கு மாதம் இதழ் இலவசமாக அனுப்பப்படும். சந்தா கட்ட விரும்புபவர்கள் இதழ் அவ்வாறு வரத்தொடங்கிய பின் கட்டினால் போதுமானது. அவ்வாறு மணியார்டர் அனுப்புபவர்கள் மறக்காமல் space for communication என்ற இடத்தில் உங்கள் விலாசத்தைக் குறிப்பிடவும் - நிர்வாகி

# நான் ஹிஜாபுக்குள் நுழைந்த கதை!

## ~ யுவோன் ரிட்லீ

**(தமிழில்... சகோதரி ஷிஃபாயே மரியம்,** ***Project Manager, Cognizant)***

[யுவோன் ரிட்லீ, பிரிட்டனைச் சேர்ந்த பிரபல பத்திரிக்கையாளர். ஆப்கானிஸ்தானில் பிரிட்டனின் உளவாளியாக நுழைந்த இவர் பின்னர் தலிபான் இயக்கத்தினரால் பிடிக்கப்பட்டு சிறிது காலம் அவர்களின் கைதியாக இருந்து பின்பு விடுவிக்கப்பட்டார். அவர்களின் பண்பான நடத்தையும் திருக்குர்ஆன் வாசிப்பும் அவரை இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்க அவர் இஸ்லாத்தை மனமுவந்து தழுவினார். தன் அனுபவங்களை கூற ''தாலிபானின் பிடியில்'' என்ற புத்தகத்தையும் வெளியிட்டார். இன்று இவர் ஒரு மேற்குலகில் முன்னணி மனித உரிமை மற்றும் பெண்ணுரிமைப் போராளி!]

ஹிஜாப்... உலகின் அனைத்து அரசியல்வாதிகளும் பத்திரிக்கையாளர்களும் விரும்பி விமர்சனம் செய்யும் விஷயம் இது! இஸ்லாமியப் பெண்கள் அணியும் ஹிஜாப் என்னும் உடலை மறைக்கும் முழு ஆடை.... அதை அணிந்திருக்கும் பெண்களின் கருத்து என்னவென்று அறிய முற்படாமல் தமக்கு தோன்றியவற்றை எல்லாம் தங்களுடைய கண்ணோட்டமாகப் பிதற்றிகொண்டு திரிகின்றார்கள் இவர்கள்! இந்த அறியாமையை என்னவென்பது?

தன் சொந்தக்கருத்தை மட்டுமே மூலாதாரமாக வைத்துக்கொண்டு எழுதும் இவர்களுக்கு உண்மையில் ஹிஜாபைப் பற்றியும் இஸ்லாம் தன் பெண் மக்களை எப்படிப் பாதுகாக்கிறது என்பதைப் பற்றியும், மொத்தத்தில் 1400 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட வலுவான இஸ்லாமியக் கட்டமைப்பைப் பற்றியும் எதுவும் தெரியாது.

ஆயினும் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அரபு நாடுகளில் நடக்கும் குழந்தைத் திருமணம், பெண்களுக்கு செய்யப்படும் கத்னா (விருத்த சேதனம்), கௌரவக்கொலை மற்றும் கட்டாயத் திருமணங்கள் போன்ற



அரபுக் கலாச்சாரம் சம்மந்தமானவை மட்டுமே! இவற்றை இஸ்லாத்தோடு இணைத்து இஸ்லாத்தை தவறான கோணத்தில் விமர்சிப்பதில் அகமகிழ்ந்து கொள்கின்றனர்.

அவற்றில் நான் மிகவும் வெறுப்பது என்னவென்றால் சௌதி அரேபியாவை உதாரணம் காட்டுவதும், அங்கு பெண்கள்

வாகனம் ஓட்டுவதற்கு விதிக்கப்படும் தடை செய்வதைப்பற்றி விமர்சிப்பதும் ஆகும். இவர்கள் சாடும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் இஸ்லாம் காரணம் ஆகாது. ஆயுனும் அவர்கள் தம் ஆதிக்க பலத்தால் இஸ்லாத்தைப் பற்றி தவறான குற்றச்சாட்டுகளை எழுதியும் பரப்பியும் வருகிறார்கள். நான் இவர்களை வேண்டிக்கொள்வது என்னவென்றால்.... ஒரு தூய்மையான மார்க்கத்தை ஒரு கலாச்சார வழக்கத்தோடு முடிச்சுப்போட்டு மக்களை குழப்ப வேண்டாம் என்பதே! .

முஸ்லிம் ஆண்கள் தங்கள் பெண்களை எப்படி அடித்து துன்புறுத்துகிறார்கள் என்பது பற்றி எழுதும்படி என்னை கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இது உண்மையல்ல என்று எனக்கு நன்றாகத்தெரியும். இஸ்லாத்தை விமர்சிப்பவர்கள் திருக்குரானிலிருந்தும், ஹதீஸ்களில் இருந்தும் சம்மந்தமில்லாத சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாத வாசகங்களையும் எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால் உண்மையில் ''ஒரு உண்மையான அடியான் தன் மனைவியை அடிக்க நேர்ந்தாலும் அது அவள் உடலின் மீது எந்த காயத்தையும் கூட உருவாக்கக் கூடாது'' என்று குர்ஆன் கட்டளை இடுகிறது. இது ஆண்களை எச்சரிக்கை செய்யும் கட்டளையாகவே உள்ளது. மற்ற மதங்கள் இதைப்பற்றி மூச்சுகூட விடுவதில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

சரி... நாம் இப்பொழுது சில சுவையான புள்ளி விபரங்களைச் சற்று பார்ப்போம். தேசியக் குடும்ப வன்முறை ஹாட்லைன் (***National Domestic Violence Hotline)*** கணக்கெடுப்பின் படி வருடத்திற்கு 4 மில்லியன் அமெரிக்கப் பெண்கள் கடுமையான குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். சராசரியாக தினசரி 3 பெண்களுக்கு மேல் அவர்களது கணவர்கள் மற்றும் காதலர்களால் (***boy friend***) கொல்லப்படுகின்றனர். கடந்த 9/11ல் இருந்து 5500 பெண்கள் சாகும்வரை அடிக்கப்பட்டும் வருகின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிலர் இதை நாகரீக உலகின் மீது போடப்படும் பழி என நினைக்கலாம். ஆனால், பெண்கள் மீது நடத்தப்படும் இந்த வன்முறை ஒரு உலகளாவிய பிரச்னை ஆகும். இப்படிப்பட்ட வன்முறையை நிகழ்த்தும் ஆண்கள், எந்த குறிப்பிட்ட கலாச்சாரத்தையோ மதத்தையோ சேர்ந்தவர்கள் அல்ல.

உண்மை என்னவெனில், உலகின் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் உதை வாங்கிக்கொண்டும், பாலுறவுக்கு கட்டாயப் படுத்தப்பட்டுக்கொண்டும், பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டும் வாழ்நாள் முழுவதும் கழித்துக்கொண்டிருக்கின்றனர். பெண்கள் மீது நடத்தப்படும் வன்முறை பொதுவானது. மதம், வகுப்பு, அந்தஸ்து, தோலின் நிறம், கலாச்சாரம்

இவைகளுக்கு அப்பாற்பட்டது.

இஸ்லாம் வரும் முன்பு வரை பெண்கள் மிகவும் கீழ்தரமானவர்களாகவே கருதப்பட்டு வந்தனர். உண்மை என்னவெனில், மேற்கத்திய ஆண்கள் இன்னுமே தங்களைப் பெண்களை விடவும் மிக உயர்வானவர்களாகவே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். இதன் விளைவுகள் இன்றும் கீழ் மட்டத்திலிருந்து உயர் பதவிகள் வரை வேலை பார்க்கும் பெண்களுக்கு, வழங்கப்படும் ஊதியம் மற்றும் பதவி உயர்வு போன்றவற்றில் பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

மேற்கத்தியப் பெண்கள் இன்றும் ஒரு விற்பனைச் சரக்கு போன்றே நடத்தப் படுகின்றனர். அவர்கள் பெருகிவரும் பாலியல் அடிமைத்தனம், விரும்பத்தகாத விற்பனை யுக்திகள், பெண்களின் உடலை வியாபாரப் பண்டமாகவும் விளம்பரச் சரக்காகவும் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இங்கு பாலியல் பலாத்காரம், கொடுமை மற்றும் வன்முறைகள் தினசரி நிகழ்வுகளாகவும், ஆண் பெண் சமத்துவம் என்பது ஒரு வெற்று மாயையாகவும் உள்ளது. பெண்களின் செல்வாக்கு அவர்களின் மார்பகங்களின் அளவு சம்மந்தப்பட்டதாகவும் அமைந்துள்ளது.

முன்பெல்லாம் முக்காடு அணிந்து செல்லும் பெண்களைக் கண்டால் எனக்கு அவர்கள் வாயில்லா ஜீவன்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் தென்பட்டனர். ஆனால் இஸ்லாத்தை நான் அறிந்த பிறகு அவர்கள் எனக்கு பலசெயல் திறங்களையும், ஆற்றலையும், எந்த சூழ்நிலையையும் சமாளிப்பவர்களாகவும், சகோதரத்துவத்தின் அடயாளமாகவும் காணப்படுகிறார்கள். இன்று இவற்றிற்குமுன் மேற்கத்திய பெண்ணியத்தை ஒப்பிடும்போது அது அறியாமையின் ஏமாற்றத்தின் உச்சசகட்டமாகப் படுகிறது!

செப்டெம்பர் 2001ல், நான் ஆஃப்கானிஸ்தான் எல்லையில் புர்கா அணிந்து திருட்டுத்தனமாக நுழைய முற்பட்டபோது, தாலிபான் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டேன். அச்சம்பவம் என்னை மிகுந்த பயத்துக்குள்ளாக்கியது. (தொடரும் இன்ஷாஅல்லாஹ்)

# இறைவனையே சார்ந்திருப்போம்!

“நீங்கள் ஒன்றை வெறுப்பீர்கள் அது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம் நீங்கள் ஒன்றை விரும்புவீர்கள் அது உங்களுக்கு தீங்காகவும் இருக்கலாம் நீங்கள் அறிய மாட்டீர்கள் அல்லாஹ்வே மிக அறிந்தவன்” (அல்குர்ஆன் 2:216)

# பாங்கோசையும் நாய்கள் ஊளையிடுதலும்!

தொழுகைக்கான அழைப்புக்கு பாங்கு என்று சொல்லப்படும். நீங்கள் காலை வேளையில் பள்ளிவாசல்களில் இருந்து இந்த அழைப்பு விடப்படும்போது சுற்றிலும் உள்ள நாய்களும் கூடவே ஊளையிட்டுக் கதற ஆரம்பிப்பதைக் கண்டிருப்பீர்கள். இது ஏன்?

தொழுகைக்கான பாங்கு சப்தம் எழும்போது அங்கு என்ன நடக்கிறது?

நாம் கண்ணால் காணாத பலவிடயங்கள் நம்மைச் சுற்றி நடக்கின்றன என்பதை இறைவனின் தூதருக்கு இறைவன் அறிவித்துக் கொடுத்த செய்திகளில் இருந்து அறிகிறோம். இதோ நபிகளார் கூறுகிறார்கள்:

● **தொழுகைக்காக (பாங்கு என்ற) அழைப்புக் கொடுக்கப்படும்போது, பாங்கு சப்தத்தைக் கேட்கக் கூடாது என்பதற்காகச் சப்தமாகக் காற்றுப் பிரிந்தவனாக ஷைத்தான் புறமுதுகு காட்டி ஓடுகிறான். பாங்கு சொல்லி முடிந்ததும் திரும்பி வருகிறான். தொழுகைக்கு 'இகாமத்' (தொழுகைக்கு அணிவகுத்து நின்றதும் விடப்படும் மறு அழைப்பு) கூறும் போதும் ஓடுகிறான். இகாமத் சொல்லி முடிந்ததும் முன்னோக்கி வந்து தொழுகையாளிக்கும் அவரின் மனதிற்குமிடையில் இருந்து கொண்டு தொழுகையாளி அதற்கு முன்பு வரை நினைத்திராத விஷயங்களையெல்லாம் அவருக்கு நினைவூட்டி, "இதை நீ நினைத்துப் பார் அதை நீ நினைத்துப் பார்," என்று சொல்லிக் கொண்டு இருப்பான். தொழுகையாளி தாம் எத்தனை ரக்அத்கள்(சுற்றுக்கள்) தொழுதோம் என்று சந்தேகம் ஏற்படும் அளவிற்கு ஷைத்தான் அவ்வாறு செய்து கொண்டிருப்பான்."**

**என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். (நூல் – ஷஹீஹ் புகாரி 608)**

ஆக ஷைத்தான் என்னும் நம் கண்களுக்குப் புலப்படாத ஜீவராசி பாங்கு கொடுக்கப்படும் சத்தத்தைக் கேட்டதும் அங்கிருந்து ஓட்டமெடுக்கிறான் என்பதை அறிகிறோம். சரி, அதற்கும் நாய் ஊளையிடுவதற்கும் என்ன தொடர்பு? அதையும் மற்றொரு நபிமொழியில் இருந்தே அறிகிறோம்....

● **நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இரவு நிசப்தமாக அமைதியுறும்போது வீட்டை விட்டு வெளியில் செல்வதைத் குறைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் படைத்த பல ஜீவராசிகளை பரவவிடுகிறான். யாராவது நாய் குரைப்பதையோ கழுதை**

கத்துவதையோ கேட்க நேரிட்டால் அவர் சபிக்கப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளட்டும், காரணம் நீங்கள் பார்க்காத ஒன்றை அவை பார்க்கின்றன." (அறிவிப்பவர்: ஜாபிர் அப்துல்லாஹ் (ரலி) நூல்கள்: அஹ்மத், ஹாகிம், அபுதாவுது)

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சேவல் கூவுகின்ற சப்தத்தைக் கேட்டால் அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேளுங்கள். ஏனெனில், அது வானவரைப் பார்த்திருக்கிறது. கழுதை சப்தத்தைக் கேட்டால் ஷைத்தானிடமிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். ஏனெனில், அது ஷைத்தானைப் பார்த்திருக்கின்றது

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), (நூல்: முஸ்லிம்–5275)

இவ்வாறு ஷைத்தான் வெருண்டோடுவதை நாய்கள் காண்பதால்தான் அவை குரைக்கவும் ஊளையிடவும் செய்கின்றன என்பதை மேற்கண்ட நபிமொழிகளில் இருந்து அறியலாம். அப்படியென்றால் மற்ற தொழுகை வேளைகளில் இது நடைபெறுவதில்லையா? ... இந்த சந்தேகம் எழுவது இயல்பே. காலை வேளைகளில் ஊரடங்கி இருப்பதர் நாய்கள் தெளிவாக ஷைத்தானை கவனிக்கும் வாய்ப்புகள் அதிகம். நாமும் நாய்கள் சப்தமிடுவதை தெளிவாகக் கேட்கவும் முடிகிறது. மற்ற வேளைகளில் இது குறைவு. இறைவனே மிக அறிந்தவன்.

இந்த விளக்கம் நபிமொழிகள் என்பவை இறைவன் தனது தூதருக்கு அறிவித்துக் கொடுத்த செய்திகளே என்பதை உறுதிப் படுத்துகின்றன.

# இறைவனுக்கு நெருக்கமானவராக...

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உயர்ந்தோன் அல்லாஹ் கூறினான்: என் அடியான் என்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூருவேன். அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவு கூர்ந்தால் அவர்களைவிடச் சிறந்த ஓர் அவையினரிடம் அவனை நான் நினைவு கூருவேன். அவன் ஒரு சாண் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் ஒரு முழுமளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் (வலதும் இடதுமாக விரித்த) இரண்டு கைகளின் நீள அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனை நோக்கி ஓடிச் செல்வேன்" அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி

# நாத்திகர்களுக்கு நறுக்கென்ற கேள்விகள்!

இறைவனை மறுப்போர் அவர்களைப் படைத்த இறைவன் கேட்கும் இக்கேள்விகளுக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள்:

● **மனிதர்களின் மற்றும் பிரபஞ்சத்தின் படைப்பு பற்றி....**

52:35. அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா?

52:36. அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா?

......

56:57. நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா?

56:58. (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா?

56:59. அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?

56:60. உங்களுக்கிடையில் மரணத்தையும் நாமே ஏற்படுத்தியுள்ளோம், எனவே நம்மை எவரும் மிகைக் முடியாது.

56:61. (அன்றியும் உங்களைப் போக்கி விட்டு) உங்கள் போன்றோரை பதிலாகக் கொண்டு வந்து நீங்கள் அறியாத உருவத்தில் உங்களை உண்டாக்கவும் (நாம் இயலாதவர்கள் அல்ல).

56:62. முதல் முறையாக (நாம் உங்களைப்) படைத்தது பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவீர்கள் - எனவே (அதிலிருந்து நினைவு கூர்ந்து) நீங்கள் உணர்வு பெற வேண்டாமா?

● **அவர்கள் உண்ணும் உணவு பற்றி....**

56:63. (இப்பூமியில்) விதைப்பதை நீங்கள் கவனித்தீர்களா?

56:64.அதனை நீங்கள் முளைக்கச் செய்கின்றீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கின்றோமா?

56:65. நாம் நாடினால் திட்டமாக அதனைக் கூளமாய் ஆக்கிவிடுவோம் - அப்பால் நீங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருப்பீர்கள்.

56:66. “நிச்சயமாக நாம் கடன் பட்டவர்களாகி விட்டோம்.

56:67. “மேலும், (பயிர்களிலிருந்து எதுவும் பெற முடியாதவர்களாகத்) தடுக்கப்பட்டு விட்டோம்“ (என்றும் கூறிக் கொண்டிருப்பீர்கள்).

● **அவர்கள் பருகும் நீர் பற்றி.......**

56:68. அன்றியும், நீங்கள் குடிக்கும் நிரைக் கவனித்தீர்களா?

56:69. மேகத்திலிருந்து அதை நீங்கள் இறக்கினீர்களா? அல்லது நாம்

இறக்குகிறோமா?
56:70.நாம் நாடினால், அதைக் கைப்புள்ளதாக்கியிருப்போம் (இவற்றுக்கெல்லாம்) நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா?

- **அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் நெருப்பு பற்றி.....**

56:71. நீங்கள் மூட்டும் நெருப்பை கவனித்தீர்களா?
56:72. அதன் மரத்தை நீங்கள் உண்டாக்கினீர்களா? அல்லது நாம் உண்டு பண்ணுகிறோமா?

# அழுதபடியே தொழுத அண்ணல்

ஓர் இரவு இறைத்தூதர் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.
பாதி இரவு கழிந்திருந்தது..
நபிகளார் திடீரென்று விழித்துக் கொண்டார்கள். வீட்டிலிருந்து வெளியே சென்றார்கள்.
நானும் நபியவர்களைப் பின்தொடர்ந்து சென்றேன். அவர்கள் பக்கத்திலிருந்த பள்ளிவாசலில் நுழைந்தார்கள். ஓர் அடிமையைப் போல பயபக்தியுடன் தொழ ஆரம்பித்தார்கள்.
நான் வியப்புடன் பார்த்தவாறு நின்றிருந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் பெருமானார் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார்கள். தொழுகையின் ஒவ்வொரு நிலையிலும் அழுதவாறே இருந்தார்கள்.
வைகறையில் நபித்தோழர் பிலால் அவர்கள் தொழுகை அழைப்பை விடும் வரை இந்த நிலை தொடர்ந்தது. அதன் பின் காலை நேரத்துத் தொழுகைக்கு தலைமை தாங்கிவிட்டு வீட்டிற்கு வந்தார்கள்.
நபிகளாரின் கால்கள் தடித்து வீங்கிவிட்டிருந்தன. பெரு விரல்கள் கிழிந்து நிண நீர் வழிந்து கொண்டிருந்தது.
நபிகளாரின் நிலையைக் கண்டு நான், ''ஓ! இறைவனின் தூதரே! தங்களுக்கு ஏன் இந்த சிரமம்? தங்களின் முன், பின் பாவங்கள்தான் மன்னிக்கப்பட்டு விட்டனவே!'' - என்று அழுதவாறு கேட்டேன்.
அதற்கு நபியவர்கள், ''ஆயிஷாவே! இறைவன் என் மீது பொழிந்துள்ள அருள்வளங்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நல்ல இறையடியானாக நான் இருக்க வேண்டாமா?'' - என்றார்கள்.
நபிகளாரின் சொந்த வாழ்க்கையைக் குறித்து அவர்களின் துணைவியாரிடம் நபித்தோழர் ஒருவர் கேட்டபோது, அவ்வம்மையார் சொன்ன ஒரு சம்பவமே இது.
நபிகளார் சொன்னது எத்தனை அர்த்தமுள்ள பதில்!
இறைவன் மனிதர் மீது சொரிந்துள்ள அருள்மாரிகளுக்கு எத்தனைதான் சிரம் பணிந்து தொழுது நன்றி செலுத்தினாலும் அதற்கு ஈடில்லையே!

நன்றி: ***udayathaaragai.blogspot.com***

# எண்ணித் துணிவது எவ்வாறு?

எண்ணித்துணிக கருமம்- துணிந்தபின் எண்ணுவதென்பது இழுக்கு ..... என்ற வள்ளுவர் சொல்லை அறிவோம்.

நாம் ஒரு குறித்த வேலையை செய்வதற்கு பல திட்டங்களை இட்டு எந்த முறையான வழிகளை அதற்கு கையாள வேண்டுமோ அனைத்தையும் கையாண்டு செய்வதற்கு முற்படலாம். இறுதியில் அவைகள் அனைத்தும் பிரயோஜனம் அற்றவைகளாக மாற வாய்ப்புகள் உண்டு. அவை நமது அழிவுக்கும் இழப்புக்கும் காரணமாவதும் உண்டு. நமக்கு எவ்வளவுதான் அறிவு ஞானம் கொடுக்கப்பட்டிருந்தாலும் பல திறமைகள் இருந்தாலும், நம்மைப் படைத்த இறைவனைச் சார்ந்தே இருக்கிறோம் என்பதை நாம் ஒரு கணமும் மறந்துவிடக்கூடாது.

நாம் செய்ய முற்படும் ஏதேனும் ஒரு காரியத்தை எவ்வழியில் செய்வது என்று முடிவெடுப்பதில் நமக்கு தடுமாற்றம் ஏற்படலாம்! எதனை எந்த வழியில் எப்படிச் செய்தால் நம் குறிக்கோளை அடைய முடியும்? நமக்கு முன் தேர்வுகளும் வாய்ப்புகளும் ஒன்றுக்கு மேற்பட்டவை இருக்குமானால் தடுமாற்றம் ஏற்படுவது இயல்பே! குறிப்பாக திருமணம், தொழில், வேலைவாய்ப்பு, வியாபாரம் போன்ற அன்றாட விடயங்களில் நாம் எடுக்கப்போகும் முடிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

**அன்றைய அராபிய வழக்கம்**

இஸ்லாம் வருவதற்கு முன் இவ்வாறான நிலைமைகளில் அரேபியர்கள் இக்குழப்பத்தில் இருந்து விடுபடுவதற்காக சில வழிமுறைகளைக் கையாண்டார்கள். அதுதான் அம்பெய்து குறி பார்ப்பதாகும்! அவர்களிடம் மூன்று சீட்டுகள் இருக்கும் அவற்றில் ஒன்றில் “செய்” என்றும் மற்றதில் “செய்யாதே” என்றும் மற்றொன்றில் “ஒன்றும் இருக்காது”! இவற்றில் “செய்”என்ற சீட்டு விழுந்தால் குறித்த அக்காரியத்தைச் செய்வார்கள். “செய்யாதே” என்ற சீட்டு விழுந்தால் அதனைச் செய்ய மாட்டார்கள். “ஒன்றும் இல்லாத” சீட்டு விழுந்தால் ஏதோ ஒன்று விழும் வரை தொடர்ந்து சீட்டுகளை போட்டுக்கொண்டே இருப்பார்கள்.

**நபிகளார் கற்றுத்தந்த இஸ்திகாரா தொழுகை**

இவ்வாறான நிலைமைகளில் இருந்து இறைவிசுவாசிகளை இறைவன் இஸ்லாத்தின் மூலம் பாதுகாத்தான். குறிபார்ப்பது ஜோதிடம் போன்ற மோசடிகளில் இருந்தும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் அவர்களை தடுத்து செலவில்லாத எளிய முறையை தன் தூதர் மூலம் கற்றுக்கொடுத்தான். .

“நீங்கள் அம்பெறிந்து குறிபார்ப்பதும் தடை செய்யப்பட்டுள்ளன. இவை

பாவமாகும்” (அல் குர்ஆன் 5:3)

**இஸ்திகாரா தொழுகையை தொழும் முறை:**

கடமையான தொழுகை அல்லாத இரண்டு ரக்அத்துக்களை (சுற்றுக்களை) இஸ்திகாரா தொழுகை என்ற எண்ணத்தோடு தொழ வேண்டும். அதன் பிறகு கீழ்கண்ட பிரார்த்தனையை பொருள் விளங்கி ஓதவேண்டும்

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக பி(*B*)இல்மிக, வ அஸ்தக்திருக பி(*B*)குத்ரதிக வ அஸ்அலுக மின் ப(*F*)ள்கல் அளீம். ப(*F*)இன்னக தக்திரு வலா அக்திரு வ தஃலமு வலா அஃலமு வ அன்த அல்லாமுல் குயூப்(*B*) அல்லாஹும்ம இன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர கைருன் லீ பீ(*F*) தீனீ வ மஆஷீ வ ஆகிப(*B*)தி அம்ரீ வ ஆஜிஹி ப(*F*)க்துர்ஹு லீ வயஸ்ஸிர்ஹு லீ, ஸும்ம பா(*B*)ரிக் லீ பீ(*F*)ஹி வஇன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன் லீ பீ(*F*) தீனீ, வமஆஷீ வஆகிப(*B*)தி அம்ரீ வ ஆஜிஹி ப(*F*)ஸ்ரிப்(*F*)ஹு அன்னீ வஸ்ரிப்(*F*)னீ அன்ஹு வக்துர் லியல் கைர ஹைஸு கான ஸும்ம அர்ளினீ பி(*B*)ஹி.

**இதன் பொருள் :** இறைவா! நீ அறிந்திருப்பதால் எது நல்லதோ அதை உன்னிடம் தேடுகிறேன். உனக்கு ஆற்றல் உள்ளதால் எனக்கு சக்தியைக் கேட்கிறேன். உனது மகத்தான அருளை உன்னிடம் வேண்டுகிறேன். நீ தான் சக்தி பெற்றிருக்கிறாய். நான் சக்தி பெறவில்லை. நீ தான் அறிந்திருக்கிறாய். நான் அறிய மாட்டேன். நீ தான் மறைவானவற்றையும் அறிபவன்.

இறைவா! இந்தக் காரியம் எனது மார்க்கத்திற்கும், எனது வாழ்க்கைக்கும், எனது இம்மைக்கும், மறுமைக்கும் நல்லது என்று நீ கருதினால் இதைச் செய்ய எனக்கு வலிமையைத் தா! மேலும் இதை எனக்கு எளிதாக்கு! பின்னர் இதில் பரகத்(அருள்வளம்) செய்!

இந்தக் காரியம் எனது மார்க்கத்திற்கும், எனது வாழ்க்கைக்கும், எனது இம்மைக்கும், எனது மறுமைக்கும் கெட்டது என்று நீ கருதினால் என்னை விட்டு இந்தக் காரியத்தைத் திருப்பி விடுவாயாக! இந்தக் காரியத்தை விட்டும் என்னைத் திருப்பி விடுவாயாக. எங்கே இருந்தாலும் எனக்கு நன்மை செய்யும் ஆற்றலைத் தருவாயாக! பின்னர் என்னைத் திருப்தியடையச் செய்வாயாக!

ஆதாரம்: புகாரி 1166, 6382, 7390

இவ்வாறு இறைவனிடம் ஆத்மார்த்தமாக பிரார்த்தித்து விட்டு இறைவிசுவாசியான ஒரு சகோதரனிடம் கலந்தாலோசித்து காரியங்களில் ஈடுபட்டால் அது ஒரு விசுவாசிக்கு திருப்தி உள்ளதாகவே அமையும். காரியத்தின் முடிவு தன் விருப்பத்துக்கு மாறாக அமைந்தாலும் அதுவும் நன்மைக்கே என்று அமைதியுறுவான் விசுவாசி!

# விண்வெளியில் ஒரு பரீட்சைக்கூடம்!

விமானத்தில் பறந்து செல்ல ஆசை நம் அனைவருக்கும் உண்டுதானே..

நீங்கள் ஒரு கம்பெனியில் ஒரு வேலைக்காக விண்ணப்பித்து இருந்தீர்கள்... அதற்கு பதிலாக அந்த கம்பெனி உங்களை ஒரு தேர்வுக்காக அழைக்கிறது... அது ஒரு வித்தியாசமான அழைப்பு... அந்த தேர்வு இம்முறை விண்வெளியில் என்கிறது அந்த அழைப்பு! ... ஒரு விண்கலத்தில் அமர்ந்து அந்த தேர்வை எழுதி வர வேண்டும்... போவீர்களா, மாட்டீர்களா?

விண்வெளியில் பறக்க வாய்ப்பு கிடைத்தால் அதை நழுவவிடுவோமா? அதுவும் இலவசமாக கிடைப்பது என்றால்...?

நீங்கள் நழுவவிட்டாலும் உங்களைப் படைத்தவன் விடுவதாக இல்லை. ஆம்... உங்களைப் படைத்த பின் உங்களை ஒரு விண்கலத்தின் மீதுதான் விட்டுள்ளான். ஆம் அதுவே பூமி என்ற பிரமாண்டமான விண்கலம்!

ஆம் அன்பர்களே, நம்மில் பலரும் வாழ்க்கைக்காக உழைப்பதிலும் உழைத்து சம்பாதித்ததை செலவு செய்வதிலும் ரொம்பவும் பிசியாக இருப்பதால் இந்த உண்மைகளின் பக்கம் கவனம் செலுத்த நேரம் கிடைப்பதில்லை என்பது உண்மைதான்...

உங்கள் முகவரி என்ன என்று கேட்டால், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், மாநிலம், நாடு இவற்றோடு நிறுத்திக் கொள்கிறோம். ஆனால் அதற்கப்பாலும் உள்ள முகவரியை நாம் அறிந்து கொள்ளவேண்டாமா?

வாருங்கள்.... அவற்றைப் பற்றியும் சிறிது அறிந்து கொள்வோம்...

இதோ நம்மைப் படைத்த இறைவனே நம்மை இவற்றைப்பற்றி ஆராயுமாறு அழைக்கிறான்....

- **பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் (ஆராய்ந்து) பார்க்க வேண்டாமா? (அல்குர்ஆன் 88: 20)**
- **வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதில் இரவு பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு சான்றுகள் உள்ளன. (அல்குர்ஆன் 3:190)**

இரவும் பகலும் நம் மீது மாறி மாறி வருவதைப் பற்றியும் வானில் கண்சிமிட்டும் விண்மீன்களைப் பற்றியும் நமக்கு அருகாமையில் உள்ள சந்திரன் மற்றும் சூரியன் இவற்றின் சலனங்களையும் பற்றியும் கவனமாக சிந்தித்தாலே நாம் ஓரிடத்தில் நிற்கவில்லை என்பதை அறியலாம். நாம் நமது அறைக்குள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் நம்மை சுமக்கும்

பூமி என்ற விண்கலம் தன் பயணத்தை நிறுத்துவதில்லை. பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றி வருகிறது. அறிவியல் நமக்கு இன்று கற்றுத்தரும் உண்மைகள் இவை:

●. பூமி சூரியனைச் சுற்றும் தூரம் 68 கோடியே 39 இலட்சம் மைல்கள்.

●. பூமியோடு சேர்ந்து நாமும் ஒரு வினாடிக்கு 18.5 மைல்கள் பிரயாணம் செய்கிறோம்.

● பூமி தன்னைத் தானே சுற்றுவதில் நாம் வினாடிக்கு 1525 அடி நகர்ந்து போகிறோம்.

●. பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவர ஒரு முழு நாள் ஆகும். (அதாவது 23 மணி நேரமும், 56 நிமிடங்களுமாகும்.)

● பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வர ஒரு வருடம் ஆகும்..(அதாவது 365 நாட்களும் 6 மணி நேரமும், 46 நிமிடங்களும். 48 வினாடிகளுமாகும்.)

● சந்திரனோ பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

● பூமியும் ஏனைய கிரகங்களும், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட பாதையில் பிறழாமல் சுற்றிக்கொண்டே இருக்கின்றன.

● பூமியிலிருந்து சந்திரன் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிம் மைல்களுக்கு அப்பால்இருக்கிறது.

ஆக, நாம் செய்து கொண்டிருக்கும் விண்வெளிப்பயணம் எப்படிப்பட்டது? எத்தனை விதமான பயணங்கள் பாருங்கள்...

● தன்னைத்தானே சுற்றும் பயணம்!

● சூரியனை சுற்றும் பயணம்!

● சூரியன், சதிரன், நட்சத்திரங்கள், மற்றும் கிரகங்கள் இவற்றோடு சேர்ந்து செய்யும் பிரபஞ்சப் பயணம்.! இங்கேயும் முடியவில்லை.

● பிரபஞ்சம் முழுமையாக சேர்ந்து அண்ட வெளியில் வெளிநோக்கி வளையமடித்துக்கொண்டு போகும் பயணம்!

இவ்வாறு நான்கு விதமான பயணங்கள் செய்து கொண்டே இருக்கிறோம். அத்தனையும் இலவசம்! அதே நேரம் நாம் எதைப்பற்றியும் கவலைப்படாமல் வீட்டிலே நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறோம்.

***36:37.*** **இரவும் இவர்களுக்கோர் அத்தாட்சியாகும் அதிலிருந்து பகலை கழற்றி விடுகிறோம் அதனால் இவர்கள் ஆழ்ந்த இருளிலாகிவிடுகிறார்கள்.**

***36:38.*** **இன்னும் (அவர்களுக்கு அத்தாட்சி) சூரியன் தன் வரையரைக்குள் அது சென்று கொண்டிருக்கிறது இது யாவரையும் மிகைத்தோனும்,**

யாவற்றையும் நன்கறிந்தோனுமாகிய (இறை)வன் விதித்ததாகும்.
**36:39.** இன்னும் (உலர்ந்த வளைந்த) பழைய பேரீத்த மட்டையைப் போலாகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல மன்ஸில்களை (தங்குமிடங்களை) ஏற்படுத்தியிருக்கின்றோம்.
**36:40.**சூரியன் சந்திரனை (நெருங்கிப்) பிடிக்க முடியாது; இரவு பகலை முந்தமுடியாது. இவ்வாறே எல்லாம் (தம்) வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன.

இவையெல்லாம் எதற்காக? இப்பயணங்கள் எதை இலக்காகக்கொண்டு நடைபெறுகின்றன? நாம் கண்டும் காணாமல் இப்படியே இருந்துவிட்டால் இதை நடத்திக்கொண்டு இருப்பவன் சும்மா விடுவானா? அவன் வீணுக்காக இதை செய்கிறானா? நாம் சிந்திக்க வேண்டாமா அன்பர்களே?
**23:115.** "நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?"
இறைவனின் இக்கேள்விக்கான பதிலை சிந்திக்கும்போதுதான் இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்வது உண்மை என்று புலப்படும். அந்த உண்மை என்னவெனில் இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சைக் கூடமாகப் படைத்துள்ளான் என்பதே!.
ஆம், இந்த பூமியென்ற விண்கலத்தின் மீதமர்ந்து நாம் செய்யும் இந்த குறுகிய சவாரியின் நோக்கம் மறுமை வாழ்வில் நம் இருப்பிடத்தை முடிவு செய்வதற்காகவே! இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்வோர் இப்பயணத்தின் இறுதியில் சொர்க்கத்தை சென்றடைகிறார்கள். அல்லாதோர் நரகத்தை சென்றடைகிறார்கள்.

# இறந்தவருக்காக தர்மம்

நபித்தோழர் ஸஅத் பின் உப்பாதா (ரளி) அவர்கள் வெளியே சென்றிருந்த போது அவருடைய தாயார் இறந்து விட்டார். அப்போது அவர் நபி (ஸல்) அவர்களிடம், "இறைவனின் தூதரே! என் தாயார் நான் வெளியே சென்றிருந்த போது மரணமடைந்து விட்டார். நான் அவர் சார்பாக தர்மம் ஏதும் செய்தால் இது அவருக்குப் பயனளிக்குமா?" என்று கேட்டார். நபி (ஸல் அவர்கள், "ஆம்!" என்று பதிலளித்தார்கள். இதைக் கேட்ட ஸஅத் (ரளி) அவர்கள், "நான் எனது மிக்ராஃப் எனும் தோட்டத்தை என் தாயார் சார்பாக தர்மம் செய்து விட்டேன். அதற்கு தங்களை சாட்சியாக்குகின்றேன்" என்று கூறினார்கள்.
(
அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரளி) (நூல்: புகாரி 1388, 2756)

# பூமியென்ற வாழ்விடம்!

இன்றைய விஞ்ஞானிகள் பூமியைப்பற்றி கண்டறிந்தவைகளில் சில....

- பூமியின் வயது 455 கோடி வருடங்கள்.
- பூமியின் சுற்றளவு 25000 மைல்கள். உருண்டை வடிவம் கொண்டது.
- பூமியின் குறுக்களவு 8000 மைல்கள்
- எவரெஸ்ட் மலையின் உயரம் 29000 அடி உயரம்.
- பெண்ட்லி பள்ளத்தாக்கு 8300 அடி ஆழம்.
- இப்போது நாம் காணும் மண்ணும் கல்லும் கலந்த பகுதி தான் பூமியின் பொறுக்கு. சுமார் 25 மைல் வரை தான் இந்தப் பொறுக்கு.
- அதற்குக் கீழே 1800 மைல் வரை பாறை.
- அதற்கும் கீழே 2160 மைல் வரை அக்கினிக் குழம்பு. அதாவது பாறையும் இரும்பும் உருகி உலோகக் குழம்பாகி பயங்கரச் சூட்டில் கொதித்துக் கொண்டிருக்கும்.
- இந்த அக்கினிக் குழம்புக்கும் கீழே 780 மைலுக்கு கனத்த உலோகம்.
- இதையெல்லாம் தோண்டிப் பார்க்க நம்மிடம் ராட்சஸ இயந்திரங்கள் இல்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட ஆழம் வரை மட்டுமே தோண்டிப் பார்த்திருக்கிறார்கள்.
- பூமியின் முழுப்பரப்பின் 70.8 விழுக்காடு கடல்கள்.மீதமுள்ள பகுதியே நாம் வாழும் பகுதி.

இவ்வளவையும் இன்னும் நாம் அறியாத பலவற்றையும் சுமந்து கொண்டிருக்கும் பூமிப்பந்தின் மீது நம்மை அமர்த்தியவன் இந்த பூமி நம்மோடு இன்று பகிர்ந்து கொள்ளும் செய்திகளையும் செவிமடுக்க அழைக்கிறான்...

**_36:33._ அன்றியும், இறந்து (தரிசாகக்)கிடக்கும் பூமி அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும் (பின்னர் மழையினால்) அதனை நாமே உயிர்ப்பித்து, அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம் அதிலிருந்துதான் இவர்கள் உண்கிறார்கள்.**

**_36:34._மேலும், அதில் நாம் பேரீத்த மரங்களினாலும், திராட்டசை(க் கொடி)களினாலும் தோட்டங்களை உண்டாக்குகிறோம் இன்னும் அதில் நீரூற்றுக்களைப் பீறிட்டு ஓடச்செய்கின்றோம்.**

**_36:35._ அதன் பழவகைகளை அவர்கள் உண்பதற்காக ஆனால் அவர்களுடைய கைகள் இதை உண்டாக்கவில்லை – ஆகவே அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?**

**_36:36._ பூமி முளைப்பிக்கின்ற (புற் பூண்டுகள்) எல்லாவற்றையும், (மனிதர்களாகிய) இவர்களையும், இவர்கள் அறியாதவற்றையும் ஜோடிஜோடியாகப் படைத்தானே அவன் மிகவும் தூய்மையானவன்.**

● பூமியைப் படைத்தவன் அதன் நோக்கத்தை இவ்வாறு கூறுகிறான்....

**18:7. (மனிதர்களில்)அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக, நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம்.**

● அதே பூமி ஒருநாள் உருமாற்றப்படும் என்றும் எச்சரிக்கிறான்...

**18:8. இன்னும், நிச்சயமாக நாம் அதன் மீது உள்ளவற்றை (ஒரு நாள் அழித்துப்) புற்பூணில்லாப் பாலைநிலமாக்கி விடுவோம்.**

ஆக, நம்மையும் இந்த பூமியையும் படைத்து பரிபாலித்துவரும் கருணையாளனாம் இறைவனுக்கு நாம் நன்றிக்கடன் பட்டவர்கள் என்பது நாம் பெறவேண்டிய பாடமாகும். ஆனால் இறைவன் நமக்கு அயராது வழங்கும் அருட்கொடைகளை அனுபவித்துவிட்டு இறைவன் அல்லாதவற்றை வணங்குவதும் உயிரற்ற உணர்வற்ற பொருட்களை கடவுள் என்று பாவிப்பதும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும். அவனை இழிவுபடுத்துவதும் செய்நன்றி கொல்லும் செயலுமாகும். இச்செயலையே திருக்குர்ஆன் இணைவைத்தல் என்றும் இது இறைவன் மன்னிக்காத பெரும் பாவம் என்றும் குறிப்பிடுகிறது.

**2:22. அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச்செய்து, அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான் (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்.**

(அல்லாஹ் என்றால் வணக்கத்துக்கு உரிய இறைவன் என்று பொருள்)

● இதே பூமி அதன்மீது நடைபெறும் அனைத்து செய்திகளையும் பதிவு செய்கிறது என்றும் அவற்றை இறுதித் தீர்ப்பு நாளன்று வெளிப்படுத்தும் என்றும் இறைவன் எச்சரிக்கிறான்:

**99:1. பூமி பெரும் அதிர்ச்சியாக – அதிர்ச்சி அடையும் போது**

**99:2. இன்னும், பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது–**

**99:3. "அதற்கு என்ன நேர்ந்தது?" என்று மனிதன் கேட்கும் போது–**

**99:4–5. உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறிவித்ததனால் அந்நாளில், அது தன் செய்திகளை அறிவிக்கும்.**

**99:6. அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள்.**

**99:7. எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார்.**

**99:8. அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.**

# மருத்துவரின் மனம் கவர்ந்த இஸ்லாம்

அமெரிக்காவில் ஓர்ஃபியா என்ற பெண் மருத்துவர் ஒரு விசித்திரமான பிரசவ கேஸைச் சந்திக்கின்றார். பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டவர் ஓர் அரபியப் பெண்மணி! அந்தப் பெண் பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருக்கின்றார். நடந்தது என்ன? அந்த மருத்துவரே விவரிக்கின்றார்....

பிரசவ வேதனையில் இருந்த அவரிடம், ''எனது பணி நேரம் முடிந்து விட்டது. அடுத்து வருகின்ற ஆண் மருத்துவர் உங்கள் பிரசவத்தைப் பார்ப்பார்'' என்று நான் சொன்னதும் அந்தப் பெண் அழவும் அலறவும் ஆரம்பித்து விட்டார். ''ஆண் மருத்துவரா எனக்குப் பிரசவம் பார்க்கப் போகின்றார்? வேண்டாம். ஆண் மருத்துவர் வேண்டவே வேண்டாம்'' என்ற கதறல் அவரிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

அந்தப் பெண்ணின் இந்த விவகாரம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது ஒரு புரியாத புதிராக எனக்குப் பட்டது.

''இத்தனை ஆண்டு காலமாக எனது மனைவியை, தனது வாழ்நாளில் தன்னுடைய தகப்பனார், தன் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள், ஒன்று விட்ட சகோதர, சகோதரிகள், சிறிய, பெரிய தந்தையர் போன்றோர் தவிர வேறு எந்த அந்நிய ஆடவரும் பார்த்தது கிடையாது'' என்று அப்பெண்ணின் கணவர் விளக்கம் சொன்னார். மிகக் கடுமையான ஆச்சரியத்தில் நான் சிரித்தேன்.

''என் முகத்தைப் பார்க்காத ஓர் ஆடவர் உண்டா?'' என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

அவ்விருவரின் கோரிக்கையை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. அதனால் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்தேன். இணங்கினேன்.

குழந்தை பிறந்தது. குழந்தை பெற்ற அவருக்கு ஆறுதல் அளிப்பதற்கு, அமைதியளிப்பதற்கு இரண்டாம் நாள் அவரிடம் வந்தேன்......

''பிரசவத்திற்குப் பின்னால் பெண்களுக்கு நாற்பது நாட்கள் அளவுக்கு இரத்தப்போக்கு இருக்கும். அமெரிக்க தம்பதியர்கள் இக்கால கட்டத்தில் காக்க வேண்டிய தடை, தடுப்புகளைத் தகர்த்தெறிந்து விட்டு தாம்பத்தியத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் பல்வேறு நோய்களுக்கு இலக்காகி விடுகின்றனர்.

எனவே குறைந்தபட்சம் 40 நாட்களுக்கு தம்பதியர் பத்தியம் காக்க வேண்டும். உடலுறவுக்கு விடை கொடுத்து விடவேண்டும். இந்த 40

நாட்களுக்கு இடையே பாதுகாப்பான உணவு சாப்பிட வேண்டும். பாரமான, பளுவான பணிகள் எதையும் செய்யாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

தொடர்ந்து நடைபெற்று வரும் நிரூபிக்கப்பட்ட மருத்துவ ஆய்வுகளின் அடிப்படையில் தான் இதைத் தெரிவிக்கிறேன்"" என்று அந்தப் பெண்ணிடம் தெரிவித்தேன்.

அந்த அரபியப் பெண் ஆசுவாசமாக, அமைதியாக, எவ்வித பரபரப்புமின்றி, ''பிரசவமான பெண்ணின் இரத்தம் நிற்கின்ற வரையில் தாம்பத்தியத்திற்கு இஸ்லாம் தடை விதித்திருக்கின்றது" என்று தெரிவித்தார்.

''அத்துடன் மட்டுமல்லாமல் இக்கால கட்டத்தில் தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்களையும் இத்தகைய பெண்களுக்கு இஸ்லாம் ரத்து செய்துவிடுகின்றது" என்று அவர் தெரிவித்தது தான் தாமதம்! அவரது இந்த யதார்த்தமான பதில் என்னுள் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

நீண்ட, நெடிய ஆய்வுக்கூட அறிஞர்களின் ஆய்வை இஸ்லாம் தன் வாழ்க்கை நெறியில் சர்வ சாதாரணமாக இழையோடச் செய்திருக்கின்றது என்று எண்ணி பிரமித்துப் போய்விட்டேன்.

இந்த நேரத்தில் குழந்தைகள் நல பெண் மருத்துவர் வருகை தந்தார். குழந்தை நலன் தொடர்பான மருத்துவ அறிவுரைகளை மணிக்கணக்காக விவரிக்க ஆரம்பித்தார்...........

''குழந்தைகளை அதன் வலது பக்கமாக உறங்க வைக்க வேண்டும். இதன் மூலம் அதனுடைய இதயத் துடிப்புகள் சீராக அடிக்கின்றன, அமைகின்றன" என்று சொன்னதும் குழந்தையின் தகப்பனார், ''நல்ல காரியங்கள் அனைத்திலும் வலது பக்கம் தான் என்று நபி (ஸல்) அவர்களின் வழிமுறைப்படி வலது பக்கமாகவே நாங்கள் உறங்க வைக்கின்றோம்." என்று சொன்னதும் மீண்டும் என்னுடைய உடலில் நாடி நரம்புகளில் அதிகமான அதிர்வலைகளைப் பாய்ச்சியது.

அவ்வளவுதான். மருத்துவமனைக்கு ஒரு மாதம் விடுப்பு போட்டேன். அருகில் உள்ள நகரத்தில் அமைந்திருக்கும் ஓர் இஸ்லாமிய மையத்திற்குச் சென்று விடை தேடினேன். ஏற்கனவே இருந்த மார்க்கத்திலிருந்து விடுதலையானேன். என்னை நான் இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டேன்.

**நன்றி: அல்ஆலமுல் இஸ்லாம், அரபி வார இதழ்**

தகவல்: ***AR Abdul Latheef***

# ஹலால் (Halal) என்றால் என்ன ??

பொதுவாக பலவீனமான ஜீவராசிகள் பலமான ஜீவராசிகளுக்கு உணவாகப் படைக்கப் பட்டிருக்கின்றன என்பதும் அதில்தான் இவ்வுலகின் சூழலியல் சமநிலை (***ecological balance)*** பாதுகாக்கப் படுகிறது என்பதும் நாமறிந்த உண்மை. ஒவ்வொரு ஜீவராசியும் தன் உணவை தான் விரும்பிய வகையில் அடையவும் உண்ணவும் செய்யலாம் என்றாலும் மனிதனுக்கு மட்டும் இறைவன் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளான். அவற்றை மீறுவது இறைவனால் பாவமாகக் கருதப்படும். அவ்வப்போது தனது தூதர்கள் மூலமாக இக்கட்டுப்பாடுகளை எவ்வாறு பேணுவது என்பதை கற்றுக் கொடுக்கவும் செய்துள்ளான்.

தன்னைவிட பலவீனமான தாவரங்கள் என்ற ஜீவராசிகளையும் கால்நடைகள் என்ற ஜீவராசிகளையும் உண்பதற்கு மனிதனுக்கு அனுமதியும் உடலமைப்பும் இறைவன் வழங்கியிருந்தாலும் கால்நடைகளை உணவாக அடைவதற்கு தெளிவான விதிமுறைகளை தன் தூதர் மூலமாக மனிதகுலத்துக்கு கற்றுக்கொடுத்துள்ளான்.

## ஹலால் என்றால் என்ன?

இறைவன் உண்பதற்கு அனுமதித்த கால்நடைகளை இறைவனின் பெயர் கூறி அவனது தூதர் காட்டித்தந்த வழியில் அறுப்பதற்கே ஹலால் முறை என்று கூறப்படும். அந்த மாமிசத்துக்கே ஹலால் உணவு என்று கூறப்படும். ஹலால் என்ற அரபு வார்த்தையின் பொருள் ‘அனுமதிக்கப்பட்டது’ என்பதே. இதன் எதிர் பதம் ‘ஹராம்’ (தடுக்கப்பட்டது) என்பது.

இறைவனின் தூதர் காட்டித்தந்த வழிமுறையில் பிராணிகளை அறுக்கும்போது பல நன்மைகள் விளைகின்றன. பல தீமைகளில் இருந்தும் கொடுமைகளில் இருந்தும் அறுபடும் பிராணியும் அந்த மாமிசத்தை உண்ணும் நாமும் காப்பற்றப் படுகிறோம்.

முக்கியமாக ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும் போது அதன் கழுத்து பகுதி முழுவதும் அறுபடாமல் மூளைக்கு செல்லும் நரம்பு வரை அறுப்பதால் அதன் வலியை உணர்த்தும் நரம்புகள் துரிதமாக துண்டிக்கப்படுகின்றன. அதனால் உடல் துடித்தாலும் பிராணிகள் வலியை உணர்வதில்லை.. இப்படி அறுக்கும் போது அதன் முழு ரத்தமும் வெளிப்பட்டு ரத்தத்தின் மூலம் நோய் பரவுதல் தடுக்கபடுகிறது.

ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும்போது பேணவேண்டியவை:

1) பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் (அல்லாஹ்வின் திருப்பெயரால்... அல்லாஹ் மிகப்பெரியவன்) என்ற வாசகத்தை பொருளுணர்ந்து

கூறவேண்டும்.

2) கால்நடைகளை அறுக்க பயன்படும் கத்தி அல்லது வாள் மிகக் கூர்மையானதாக இருக்க வேண்டும்.

கால்நடைகள் மிகக் கூர்மையான கத்தி அல்லது வாளால் அறுக்கப்பட வேண்டும். அறுக்கும் போது கால்நடைகள் வலியை உணராதவாறு அல்லது மிகக் குறைவாகவே வலியை உணருமாறு மிக வேகமாக அறுக்கப்பட வேண்டும்.

3) மேற்படி ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும்போது கழுத்தில் உள்ள மூச்சுக் குழாயும் இரத்தக்குழாயும் ஒரே சமயத்தில் அறுக்கப்பட்டு - கால்நடைகளை உயிரிழக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது கால்நடைகளின் நரம்பு மண்டலம் துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

4)அறுக்கப்பட்ட கால்நடைகளின் உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வழியும்படிச் செய்ய வேண்டும்.

## இரத்தம் முழுவதும் வழிந்தோடச் செய்வதன் நோக்கம்:

● அறுக்கப்பட்ட கால்நடைகளின் இரத்தம் இரத்தக் குழாய்களில் தங்கி கிருமிகள் உருவாகாமல் இருக்க வேண்டியாகும். கால்நடைகளை அறுக்கும் போது தண்டுவடம் துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும். தண்டுவடம் துண்டிக்கப்படுவதால் - இதயத்திற்கு செல்லக்கூடிய இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டு - இதயம் நின்று போகக் கூடிய நிலை உண்டாகலாம். இதனால் இதயத்தில் உள்ள இரத்தம் இரத்த நாளங்களில் தங்கிவிடக் கூடும்.

● கிருமிகளும் - நோய்க்கிருமிகளும் உருவாக காரணமாக அமைவது உடலில் உள்ள இரத்தமே. ஹலால்முறையில் கால்நடைகளை அறுக்கும்போது - கால்நைடகளின் உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வழிந்தோடச் செய்யப்படுவதால் நோய்க்கிருமிகள் உருவாவதில்லை.

● ஹலால் முறையில் அறுக்கப்படும் கால்நடைகளின் இறைச்சி நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் இருக்கும்.

ஹலால் முறையில் அறுக்கப்படும் இறைச்சியில் இரத்தம் கலந்து விடாமல் இருப்பதால் - வேறுவிதமாக கொல்லப்படும் கால்நடைகளின் இறைச்சியைவிட ஹலால் முறையில் அறுக்கப்படும் இறைச்சி நீண்ட நேரம் கெடாமல் இருக்கும்.

● ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும்போது - கால்நடைகள் வலியை உணர்வதில்லை.

இதன் முறையில் கால்நடைகள் அறுக்கப்படும்பொழுது - கால்நடைகளின் கழுத்து நரம்புகள் மிக வேகமாக அறுக்கப்பட்டு வலியை மூளைக்குக் கடத்திச் செல்லக்கூடிய நரம்பு மண்டலம் துண்டிக்கப்பட்டு விடுவதால் அறுக்கப்படும் கால்நடைகள் வலியை உணர்வதில்லை. இரத்தம் உடலிலிருந்து வெளியேறுவதால் - உடலில் உள்ள சதைப்பாகங்கள் - இரத்தம் இன்றி சுருங்கி விடுவதால் ஏற்படும் மாற்றத்தால் தான் அறுக்கப்பட்ட மிருகங்கள்- துள்ளுவதாகவும் - துடிப்பதாகவும் நமக்குத் தெரிகின்றதேத் தவிர வலியால் அல்ல.

இதை உண்மைப்படுத்தும் விதமாக ஹலால் முறையில் அறுக்க பட்ட உயிரினமும் வேறு விதமாக (தலை துண்டிக்கப்பட்டு) அறுக்க பட்ட உயிரினங்களை விட ஹலால் முறையில் கால்நடைகள் மிக குறைந்த வலியை உணர்வதாக அறிவியல் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன.

# நீங்கள் படுக்கைக்குச் சென்றால்..

## ● இறை நினைவோடு இரவைக் கழிக்க....

நபி(ஸல்) அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது, 'அல்லாஹும்ம பிஸ்மிக்க அமூத்து வ அஹ்யா' (அல்லாஹ்வே! உன் பெயர் கூறியே நான் இறக்கிறேன் உயிர் வாழவும் செய்கிறேன்) என்று கூறுவார்கள். காலையில் (எழும்போது) 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமர்த்தனா வ இலைஹிந் நுஷூர்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும் (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியதுள்ளது) என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர் :ஹுதைஃபா இப்னு அல்யமான்(ரலி), ஆதாரம் : புகாரி.

## ● தாம்பத்திய உறவு கொள்ள விரும்பும் போது...

உங்களில் ஒருவர் தம் மனைவியுடன் தாம்பத்திய உறவு கொள்ள விரும்பும்போது, 'பிஸ்மில்லாஹி, அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வ ஜன்னிபிஷ் ஷைத்தான் மா ரஸக்த்தனா' (அல்லாஹ்வின் திருப்பெயரால்... இறைவா! எங்களைவிட்டு ஷைத்தானை விலக்கிவைப்பாயாக!) எங்களுக்கு நீ வழங்கும் குழந்தைச் செல்வத்தைவிட்டும் ஷைத்தானை விலக்கிவைப்பாயாக!) என்று பிரார்த்தித்து, அந்த உறவில் அத்தம்பதியருக்கு விதிக்கப்பட்டபடி குழந்தை பிறந்தால், அக்குழந்தைக்கு ஒருபோதும் ஷைத்தான் தீங்கிழைப்பதில்லை" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி), ஆதாரம் : புகாரி.

# நாவின் மூலம் ஈடேற்றம்!

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டைத் தர்மம் செய்தேனும் நரகத்திலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதுவும் இல்லையானால் இனிய சொல்லைக் கொண்டாவது (காப்பாற்றிக் கொள்ளுங்கள்). அறிவிப்பவர்: அதீ பின் ஹாத்திம் (ரலி), நூல்: புகாரி (6023)

● நல்லதை ஒருவர் பிறருக்கு அறிவித்துக் கொடுத்தால், அதை செய்தவனின் கூலி போன்றது அவருக்கும் உண்டு'' என நபி(ஸல்) கூறினார்கள். (அறிவிப்பவர்: (அபூமஸ்ஊத் என்ற) உக்பா இப்னு அம்ரு அல்அன்சாரீ (ரலி) அவர்கள் (முஸ்லிம்).

● யா ரசூலல்லாஹ் ! ஈடேற்றம் பெற வழி என்ன? என்று நபி (ஸல்)அவர்களிடம் கேட்டேன்,“உமது நாவைக் கட்டுபடுத்தி கொள்ளும், வீட்டில் தங்கியிரும்(வீணாக வெளியில் செல்ல வேண்டாம்). உமது பாவங்களை நினைத்து அழுதுகொண்டிரும்!” என்று நபி ஸல் அவர்கள் பதில் சொன்னார்கள். அறிவிப்பவர்:உக்பதுப்னு ஆமிர் ரலி (திர்மிதீ)

● “நிச்சயமாக அல்லாஹ்விற்கு தொண்ணூற்று ஒன்பது –நூற்றுக்கு ஒன்று குறைவான - பெயர்கள் உள்ளன. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கத்தில் நுழைவார்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவித்தார். ஆதாரம் : புகாரி

● நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் (கைபர்) பயணத்தில் இருந்தோம். அப்போது நாங்கள் மேட்டில் ஏறும்போது ‘அல்லாஹு அக்பர்’ (அல்லாஹ் மிகப்பெரியவன்) என்று (உரக்கச்) சொல்லி வந்தோம். நபி (ஸல்) அவர்கள், ‘உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள் (மெல்லக் கூறுங்கள்). ஏனெனில், நீங்கள் காது கேட்காதவனையோ, இங்கு இல்லாதவனையோ அழைப்பதில்லை. மாறாக, அருகிலிருந்து செவியேற்பவனையும் பார்ப்பவனையுமே அழைக்கின்றீர்கள்’ என்றார்கள். பிறகு நான் என் மனத்திற்குள் ‘லா ஹவ்ல வ லா குவ்வ(த்)த இல்லா பில்லாஹ்’ (அல்லாஹ்வின் உதவியின்றி பாவங்களிலிருந்து விலகிடவும் முடியாது நல்லறங்கள் புரிய ஆற்றல் பெறவும் முடியாது) என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, நபி (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். ‘அப்துல்லாஹ் இப்னு கையேஸ்! ‘லா ஹவ்ல வ லா குவ்வ(த்)த இல்லா பில்லாஹ்’ என்று சொல்லுங்கள். ஏனெனில் அது, ‘சொர்க்கத்தின் கருவூலங்களில் ஒரு கருவூலமாகும்’ என்றோ, ‘அதைப் பற்றி நான் அறிவிக்கட்டுமா?’ என்றோ சொன்னார்கள். என அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) அறிவித்தார். ஆதாரம் : புகாரி

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60-   ● ஈராண்டு சந்தா Rs.120-

Published from:

**House of Peace,**
PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்**

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262
ஓசூர் : சகோ. ர.்.பீக் - 9994713191
கோவை : சகோ. ஜுல்.்.பிகர் - 8015714648
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி : சகோ. திருச்சி முஸ்த.்.பா - 9865446344
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் .்.பிர்தௌசி- 9944656942
சேலம் : சகோ. இப்ராஹீம் 9994091364
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் 9597285160
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171
திருநெல்வேலி: சகோ. ரி.்.பாயி - 9840911985
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869

Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No.KRNA/BGE/1057/2012-2014
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of every month.
No of pages: 24+4

**(PRINTED MATTER)**

To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

## மனிதன் யார் மீது அன்புவைத்துள்ளானோ அவர்களுடன்தான் இருப்பான்

**"இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! ஒருவர் (நன்)மக்களை நேசிக்கிறார். ஆனால், (செயல்பாட்டிலும் சிறப்பிலும்) அவர்களை அவர் எட்டவில்லை. அவர் விஷயத்தில் தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?' என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள், 'மனிதன் யார் மீது அன்பு கொண்டுள்ளானோ அவர்களுடன்தான் (மறுமையில்) இருப்பான் என்றார்கள்."**
**அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி), ஆதாரம் : புகாரி.**